# சைவசித்தாந்த மெய்யியல் நோக்கில் சோமசுந்தரப் புலவரின் உயிரிளங்குமரன் நாடகம்

# The play 'Uyirilangumaran' by Somasundara Pulavar from the perspective of Saiva Siddhanta Philosophy

கலாநிதி தி. செல்வமனோகரன் / Dr. T. Selvamanoharan[1]

Date of submission: 2024-05-18
Date of acceptance: 2024-06-14
Date of Publication: 2024-07-30
Corresponding author's Name: Dr. Selvamanoharan Thiruchelvam
Email: tselvan@iniv.jfn.ac.lk

**Abstract**

The Archaic religion in Sri Lanka is Saivism, which is characterized by its philosophical doctrine. Its true essence lies in Saiva Siddhanta, and the culmination of Saivism is Saiva Siddhanta. By elucidating the essence of the three entities—Pati (God), Pasu (individual soul), and Pasa (karma)—and transforming them into true elements, Saiva Siddhanta asserts, "By removing the impurities of the soul, one attains its essence." This philosophy, expounded by the great scholar Somasundara Pulavar, has gained recognition through various works and platforms in medieval Sri Lanka. Understanding his contemporary society well, he advocated for the acceptance and understanding of Saivism and Saiva Siddhanta, blending them seamlessly into his life. He crafted a drama titled "Uyirilangkumaran," incorporating these philosophies, which spans five acts and thirteen scenes. Pulavar addressed societal issues by aligning them with Saiva Siddhanta ideology and created the drama as a means of propagating it. However, this synthesis of Saiva Siddhanta philosophy into literary works and its interpretation poses a challenge, requiring further scholarly investigation. Somasundara Pulavar's initiative in shaping Saiva Siddhanta discourse and its pedagogy, along with the tools utilized for its dissemination, form the basis for this study. While this research primarily focuses on qualitative research methodologies, it also necessitates quantitative and evaluative methods such as surveys.

**Keywords:** Uyirilangkumaran Drama, Saiva Siddhanta Philosophy, Somasundara Pulavar, Sri Lanka

## அறிமுகம்

சைவசித்தாந்தத்தின் வரலாறு வேதாகமப் பிராமணங்களில் இருந்து ஆரம்பிக்கப்பட்டாலும் திருமந்திரமே தமிழில் 'சைவசித்தாந்தம்' எனும் சொல்லை முதன்முதலில் கூறியது. சைவசித்தாந்த முப்பொருட் கோட்பாட்டை முன்வைத்தது. இதன்பின் தோத்திரங்கள், ஞானாமிர்தம், மெய்கண்ட சாஸ்திரங்கள், பண்டார சாஸ்திரங்கள்

[1]The author is a Senior Lecturer in the Department of Saiva Siddhanta, University of Jaffna, Sri Lanka. tselvan@univ.jfn.ac.lk

எனப்பல நூல்கள் எழுச்சி பெற்றன. சிவனை முதன்மைக் கடவுளாகக் கொண்ட சைவத்தின் முடிந்த முடிவே சைவசித்தாந்தம் ஆகும். பதி, பசு, பாசம் எனும் முப்பொருள்களுக்கிடையிலான தர்க்க இயைபினை வெளிப்படுத்தி அவற்றை உண்மைப் பொருட்களாகக் கொண்டு பசு, 'பாசம் நீங்கி பதியை அடைதலே அதன் இலட்சியம்' எனக் கூறி நிற்கும் கருத்து முதல்வாத மெய்யிலே சைவசித்தாந்தம் ஆகும்.

ஈழத்தின் தொன்மைச்சமயங்களுள் முதன்மையானது சைவசமயம் ஆகும். பல்லவர்கால பக்தியியக்கத்தின் தோத்திர மரபுச் செல்வாக்கு கேதீஸ்வர, கோணேஸ்வரத் திருத்தலங்கள் மீது பாடப்பட்ட பதிகங்களின் வழி சான்றுப்படுத்தப்படுகின்றது. தமிழ்ச் சூழலில் தமிழர் மெய்யியலாகக் கட்டமைக்கப்படுகின்ற சைவசித்தாந்த சாத்திர மரபு திருநெல்வேலி ஞானப்பிரகாசர் வாழ்ந்த காலத்தில் செல்வாக்குப் பெற்றிருப்பதை அடையாளப்படுத்த முடிகின்றது.காலனிய கால ஈழத்துப் புலம் தன்னடை யாளங்களை இழந்து நின்ற சூழலில் நாவலரின் வருகையும் பணியும் சைவமறு மலர்ச்சிக்கு உதவுகிறது. அவர் மரபினர் தமிழோடு, சைவத்தை சமயம், மெய்யியல் எனும் இருதளங்களிலும் வளர்த்தெடுத்தனர். அவ்வாறான செல்நெறியில் தான் நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் வருகையும் அவரது பணிகளும் அமைகின்றன. அவரால் எழுதப்பட்ட நாடகம் 'உயிரிளங்குமரன்' சித்தாந்தக் கருத்தியலை அடிப்படையாகக் கொண்டதென்ற கருத்து நிலவுகிறது. அதன் பொருத்தப்பாட்டை இக்கட்டுரை ஆய்வுக்குட்படுத்துகிறது.

## ஆய்வுச் சிக்கல்

தோத்திரமரபு, சாஸ்திரமரபு, புராணமரபு எனப் பல்தளங்களில் தனது இயங்கியலைக் கொண்டிருந்த சைவசித்தாந்த மெய்யியலை நாடக எழுத்துருவாக சோமசுந்தரப் புலவர் ஆக்கியளித்துள்ளார். இந்தப் பிரதியாக்கத்துக்கான காலப்பின்னணி, இவ்வெழுத்துவழி புலப்படுத்தப்படும் சைவசித்தாந்தக் கருத்தியல் மற்றும் அதன் பொருத்தப்பாடு, தேவை என்பன இங்கு ஆய்வுப் பிரச்சினையாக எடுத்துக் கொள்ளப் படுகின்றன.

## ஆய்வின் நோக்கம்

சோமசுந்தரப்புலவர் பன்முக ஆளுமையுள்ள புலமையாளரெனினும் சைவசித்தாந்த மெய்யியல் சிந்தனையை நாடக எழுத்துருவாக்கியமை அதற்கான பின்னணி என்பவற்றை அறிதலே இந்த ஆய்வின் பிரதான நோக்கமாகும். இப்பிரதியாக்கத்தில் சைவசித்தாந்தக் கருத்தியலின் வெளிப்பாடு, அதற்கு ஆசிரியர் பயன்படுத்திய உத்திகள் அவற்றின் பொருத்தப்பாடு என்பவற்றை அறிதல் இதன் துணைநோக்கமாகும்.

## ஆய்வு முறையியல்

இந்த ஆய்வானது விபரண ஆய்வு முறையியலை அடிப்படையாகக் கொண்டதெனினும் தேவைக்கு ஏற்ப பகுப்பாய்வு, ஒப்பீட்டாய்வு எனும் முறையியல்களும் பயன்படுத்தப்படுகின்றன.

## இலக்கிய மீளாய்வு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை நடத்திய இரண்டாவது அனைத்துலக சைவமாநாட்டில் (2017) குமரன் எழுதிய "சைவசித்தாந்தத்தினை மக்கள் மயப்படுத்துவதில் உயிரளங்குமரன் நாடகத்தின் வகிபங்கு" எனும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை ஒன்று இடம் பெற்றுள்ளது. இந்த ஆய்வுக்கட்டுரை மக்கள் மயப்படுத்துவதனையும் இலக்கியத்திறனையும் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. இதே மாநாட்டில் நவதர்சினி "சைவசித்தாந்தக் கருத்தியல் - நாடக பாட வடிவில் நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் உயிரளங்குமாரன் நாடகம்" எனும் தலைப்பிலான ஆய்வு 'நாடகக் கல்வி' எனும் அடிப்படையில் ஆக்கப் பட்டுள்ளது. மெய்யியல் நோக்கடிப்படையை இவ்விரு கட்டுரைகளும் கொண்டிருக்கவில்லை என்பதும் இவ்வெழுத்துரு தொடர்பாக வேறு ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டதாக அறிய முடியவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது. இதனை ஆய்வு இடைவெளியாகக் கொண்டு சைவசித்தாந்த மெய்யியல் நோக்கில் உயிரளங்குமரன் நாடகத்தை வாசிப்பதாக இந்த

ஆய்வு நிகழ்த்தப்படுகின்றது.

**காலச்சூழல்**

பிரித்தானியரால் உருவாக்கப்பட்ட ஒருங்கிணைந்த இலங்கையில் கிறிஸ்தவமிஷனரிகளின் நவீன கல்வி, அரச வேலைவாய்ப்பு வசதி, ஆங்கிலக்கல்வி என்பன மதமாற்ற நடவடிக்கையின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டமையும் அதற்கு கணிசமான சுதேசிகள் எடுபட்டுச் சென்றமையையும் பன்னூலாசிரியர்கள் பதிவு செய்துள்ளனர். நாவலரின் வருகை அச்சியல், கல்வியியல், சமயவியல், மெய்யியல், உரையியல், உரைநடையியல் எனப் பன்முகத்தளங்களில் சைவத்தை மீட்டுருவாக் கவும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தவும் உதவிற்று. நாவலர் விட்டுச் சென்ற பணிகளை நாவலர் மரபினர் பல நிறுவனங்களை உருவாக்கி முன்னெடுக்கத் தொடங்கினர். சைவபரிபாலன சபையின் இந்துக் கல்லூரி முகாமைத்துவ சபை, சைவபரிபாலன சபை, விவேகானந்தர் சபை எனும் சைவநிறுவனங்கள் பல சைவப் பாடசாலைகளையும் இந்துக் கல்லூரிகளையும் உருவாக்கி நடத்தின. பல தனிநபர்களும் பாடசாலைகளை உருவாக்கினர். இதனால் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்டபோது சைவாசிரிய கலாசாலைகள் உருவாயின. இதில் இராமநாதனின் பங்கு அதிமுக்கியமானது. நாவலர் விட்டுச் சென்ற பாடநூலாக்கச் செயற்பாட்டில் சில பெரியார்கள் ஈடுபட்டனர். சைவப்பெரியார் சிவபாத சுந்தரனார், பாலபோதினி, அகநூல் உள்ளிட்ட பல பாடநூல்களை மாணவர் தரத்திற்கு ஏற்ப எழுதி வெளியிட்டார்.

இருபதாம் நூற்றாண்டின் முதற்காலப்பகுதியில் ஏறத்தாழ முப்பது சைவப் பத்திரிகைகள் வெளிவந்தன. சில நின்றும் போயின. சைவ பரிபாலன சபையின் இந்துசாதனம் தொடர்ந்து வெளிவந்தது. இவ்வாறான பல செயற்பாடுகள் மூலம் மக்களிடம் சைவசித்தாந்த சிந்தனைகள் விதைக்கப்பட்டன. பல முயற்சிகள் இவ்வாறாக நடைபெற்ற போதும் சாதாரண மக்களிலும் பெண்களிலும் கற்றோர் எண்ணிக்கை மிக மிகக் குறைவாகவே இருந்தது. புராண படனம், பிரசங்கம் முதலானவை பாமரமக்களிடம் சைவ நம்பிக்கைகளையும், சைவசித் தாந்தக் கருத்தியலையும் கொண்டு சென்றன.

சுதேசத்தில் கிறிஸ்தவ மிஷனரிகளின் தொடர் செயற்பாடுகள், மதம் பரப்பலுக்கான பல்வேறு உத்திகள் கிறிஸ்தவத்தை - கிறிஸ்தவத்துக்கு சைவர்கள் மதம் மாறுவதை அதிகரிக்கச் செய்து கொண்டேயிருந்தன. சமகாலத்தில் சேர் பொன். அருணாசலத்தின் ஐக்கிய இலங்கைக் கருத்தியலுக்கு மாறாக அநகாரிக தர்மபாலாவின் 'சிங்கள பௌத்த இலங்கை'' எனும் கோஷம் பேரெழுச்சி பெற்றுக் கொண்டிருந்தது. வணிகத்தில் மேலோங்கிய இஸ்லாமிய மக்கள் தம்மிடம் இருந்த கடும்கட்டுப்பாட்டில் இருந்து சற்றுத் தளர்த்து நவீன கல்வி, நவீன பாடசாலை என்பவற்றை நோக்கி நகரத்தலைபட்டனர். சுவாமி விவேகானந்தரின் வருகை வேதாந்த எழுச்சியை ஏற்படுத்தியது. இதனால் 'வேதாந்த தெளிவாம் சைவ சித்தாந்தம்'' எனும் கருத்தியலை முன்னிறுத்த வேண்டிய சூழல் ஏற்பட்டது.

அதேவேளை 1915இல் முக்கியமான இரு சம்பவங்கள் நிகழ்ந்தன. சுதேசத்தில் சிங்கள-முஸ்லிம் இன, மதக் கலவரம் ஏற்பட்டு தேசம் முழுவதையும் அது பாதித்தது. முழு இலங்கைக்குமான படித்த இலங்கையர் பிரதிநிதியான இராமநாதன் சிறை வைக்கப்பட்ட சிங்கள வர்களை மீட்டமை முஸ்லிம்களிடம் பெரும் கசப்பை ஏற்படுத்தியது. மற்றையது முதலாம் உலகப்போராகும். முதலாம் உலகப் போர் மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியினை ஏற்படுத்தியது. இலங்கையின் இன்றுபோல் அன்றும் பெரும் பணவீக்கம் ஏற்பட்டு மக்கள் திண்டாடினர். புதிய அரசியல் நெருக்கடி இனவாத மனப்பாங்கை உருவாக்கத் தலைப் பட்டது. இத்தகைய சூழலில் சைவ அறிஞர்கள் பலர் சைவத்தையும், சைவசித்தாந்தத்தையும் கட்டுரு கலையாமல் பேணவும் நிலை நிறுத்தவும் பல முயற்சிகளைச் செய்தனர். அவர்களுள் நவாலியூர் க. சோமசுந்தரப் புலவரும் குறிப்பிடத்தக்கவராவர்.

**நவாலியூர் சோமசுந்தரப் புலவர்**

யாழ்ப்பாணம் நவாலியூரில் கதிர்காமர் இலக்குமிப்பிள்ளை தம்பதியினருக்கு மகனாகப்

பிறந்த இவர் அருணாச்சலம் உபாத்தியாயர், இராமலிங்க உபாத்தியாயர் போன்றோரிடம் பாடங் கேட்டவராவார். சைவசித்தாந்த கற்கைப் புலத்தைப் பருத்தித்துறை தாமோதரம்பிள்ளை, கோப்பாய் வேலுப்பிள்ளை முதலான உபாத்தியாயர்களிடம் பெற்றுக் கொண்டார். பாடசாலைக்கல்வியின் வழி ஆங்கில, சமஸ்கிருத மொழிப் புலமையும் ஏற்பட்டது. வட்டுக்கோட்டை சைவப்பாடசாலையில் ஆசிரியராக நாற்பது வருடங்களாகப் பணியாற்றினர்.

அக்காலகட்டத்தில் பல்வேறு நூல்களைப் பல்வேறு தளங்களில் ஆக்கியளித்த புலமையாளராக இவர் அடையாளப் படுத்தப்படுகின்றனர். நல்லை முருகன் திருப்புகழ், நல்லையந்தாதி அட்டகிரி முருகன் திருவூஞ்சல் உள்ளிட்ட பல சிற்றிலக்கியங்களையும் சாவித்திரி கதை முதலான உரைநடை இலக்கியங்களையும் எழுதினார். இவை தவிர சமூகப் பொதுநோக்கில் சுகாதாரக் கும்பியையும் பொருளாதார மேம்பாடு கருதி தாலவிலாசத்தையும் சிறுவர் பயனுறும் வகையில் சிறுவர் பாடல்களையும் பாடினார். தனி மனிதன், தமிழ், மொழி, நாட்டாரியல் என பன்முகப்பட்ட இலக்கியங்களைத் தமிழுக்குத் தந்தவரிவர். ஆயினும் இவரது இலக்கியங்களில் பெரும்பாலானவை சைவமரபோடு - சமயம், வாழ்வியல், மெய்யியல் தளங்களில் உருவாக்கம் பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது. 'யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராணக் கலாசாரம்" என்பார் பண்டிதமணி (கணபதிப்பிள்ளை, 1956). புலவரும் 'கந்த புராணக்கதைகளும் அவை உணர்த்தும் உண்மை நூற்கருத்தும், கந்தபுராண நுண்பொருள் விளக்கம்' எனும் கந்தபுராணம் தழுவிய இரு நூல்களும் கந்தவனக்கடவை முருகன் மீது இரு பிரபந்தங்களும் நல்லூர் கந்தன் மீது இரு பிரபந்தங்களும் அட்டகிரி முருகன் மீது மூன்றும் கதிர்காம முருகன் மீது ஒன்றுமென பிரபந்தங்களை ஆக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**உயிரிளங்குமரன் நாடகமும் அதன் கட்டமைப்பும்**

புலவர் சைவசித்தாந்தக் கருத்தை மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் கலாபூர்வமாகவும் எளிமையாகவும் நிகழ்த்து கலையாக வழங்க எழுதிய எழுத்துருவே இந்நாடகப் பிரதி ஆகும். சைவ சித்தாந் தத்தை கருத்தியல் தளமாகக் கொண்டு எழுதப்பட்ட முதல் நாடகப் பிரதி இதுவெனலாம். இவர் ஈழத்தின் கல்வியல் அரங்கின் முன்னோடியாக (நவதர்சினி, 2017, பக்.704) அடையாளப்படுத்தப்படுகின்றார். இந்நாடகம் 1927இல் அட்டகிரி முருகன் ஆலயத்தில் அரங்கேற்றப்பட்டதாக V.முத்துதம்பி கூறுகின்றார். (1992, பக்.127) ஆனால் புலவரோ உயிரிளங்குமரன் நாடக முன்னுரையில் (1936, பக்.8) தான் 'கற்பிக்கும் கழகத்தில் (பாடசாலை) பரிசளிப்புக் கொண்டாட்டத்துக்கு ஒரு புதிய நாடகம் எழுத்தித்தர வேண்டுமென்று தலைமையாசிரியர் கேட்டதற்கு இணங்க மாணாக்கர் நடித்தற்கு ஏற்ற சிறிய நாடகமாக அப்பொருளை அமைத்து எழுதிக் கொடுத்தேன்' என்கின்றார். ஆகவே, மாணாக்கர் நடிப்பதற்கு என்பதை நோக்காகக் கொண்டு எழுதப்பட்டது இந்நாடகம் என்பது தெளிவு.

இந்நாடகம் கொழும்பு இந்துப்பிட்டி பாடசாலை, வட்டு சைவப் பாடசாலை, நவாலி ஆகிய இடங்களில் ஆசிரியர்களும் மாணவர்களுமாக நடித்து அரங்கேற்றியுள்ளனர். நாடக எழுத்துருவை அச்சாக்க முயன்றும் பொருளாதாரம் தடையாக இருந்துள்ளது. (உயிரிளங்குமரன் நாடகம்,1936, பக்.4-5) கையெழுத்துப்பிரதியாக இருந்த நாடகம் பின் விரிவாக்கப்பட்டு 1936 இல் வெளிவந்ததாகக் (குமரன், 2017, பக்.519) கூறப்படினும் 1933இல் 'ஞாயிறு' இதழில் பகுதி பகுதியாக இந்நாடகம் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அப்பிரதியின் திருத்தமே 1936இல் நூலுருப் பெற்றிருக்கிறது.

இந்நூலின் பதிப்பாசிரியராக க. வேலுப்பிள்ளை திகழ்கின்றார். புலவரின் சமகாலத்து வாழ்ந்த வரலாற்றாசிரியர் செ. இராசநாயகம் இதற்கு அணிந்துரை எழுதியுள்ளார். சிறப்புப் பாயிரத்தை ஈழத்தவர்களான சி. கணேசையர், வே. மகாலிங்கசிவம், வட்டுக்கோட்டை அ. தில்லைநாதர், தமிழகத்தவரான ப. இராமநாதபிள்ளை மற்றும்

வெண்ணைக் கண்ணார் ஆகியோர் எழுதியுள்ளனர். ஆகவே இந்நாடகத்தைத் தமிழகத்தவரும் அறிந்துள்ளனர் என்பது தெளிவு. உயிரிளங்குமரன் நாடகம் ஐந்து அங்கங்களையும் பதின்மூன்று களங்களையும் கொண்டமைந்துள்ளது.

'இக்காலம் புதுக்கதைகள் (Novels) படிக்கவும் கேட்கவுமே ஊக்கங் கூடியிருத்தலின் சைவசித்தாந்த சாஸ்திரங்களின் அகத்தே புதைந்த உண்மைகளையெல்லாம் நாடகத்திற்கு வேண்டிய பல அங்கங் களோடும் காட்சிகளோடும் பாட்டும் உரையும் விரவ அமைத்து உயிரிளங்குமரன் எனும் பெயருடன் ஒரு நாடக நூல்'

*(உயிரிளங்குமரன் நாடகம், 1936, பக்.4)*

எழுதப்பட்டதாகப் பதிப்பாசிரியர் குறிப்பிட்டுள்ளமை இப்பிரதியின் நோக்கத்தை, தேவையை தெளிவுபடுத்துகின்றது. அந்தவகையில் இந்நாடகம் கூத்து மரபு, இசைநாடக மரபு, புதிய சமூகநாடக மரபு என்பவற்றை உள்வாங்கி எழுதப்பட்ட 'புதிய வடிவம்' என்றே கருத வேண்டியுள்ளது.

1. காலந்தோறும் தமிழர்களிடம் நிலவி வந்த பல்வேறு கூத்து மரபுகளின் வடிவம், உரையாடல், கூத்தாக்க முறையை இந்நாடகம் கொண்டுள்ளது. குறிப்பாக காத்தான்கூத்தில் காத்தான் தாயிடம் விடைபெறல், தன் வலியுணர்தல் போன்ற பகுதிகள் இந்நாடகத்திலும் இடம்பெறுகின்றன.
2. இங்கு கீர்த்தனைகள் கையாளப்படுகின்றன. அனுபந்தத்தில் பிரதியிலே உள்ள பாடல்கள் குறிப்பிடப்பட்டு இராக, தாளங்கள் உரைக்கப்பட்டுள்ளன.
3. நவீன, சமூக நாடகங்களில் வருகின்ற சாதி எதிர்ப்பு, யாவர்க்கும் கல்வி, கள்ளுக்குடித்தல் முதலான பாதகங்களைக் கடிதல் உள்ளிட்ட பல விடயங்கள் நாடகத்தில் போகிற போக்கில் பேசப்படுகின்றன.

புலவர், சமூகப்பிரச்சினைகளை சைவசித்தாந்தக் கருத்தியலோடு இற்றைப்படுத்தி நாடகத்தினை கட்டுருவாக்கம் செய்துள்ளார்.

## நாடகத்தில் சைவசித்தாந்த மெய்யியல் கருத்துக்கள்

உயிரிளங்குமரன் நாடகம் சைவசித்தாந்த மெய்யியற் கருத்தையே மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. "பதி பசு பாசம் எனப் பகர் மூன்றில், பதி போற் பசு பாசம் அனாதி" (திருமந்திரம், 115) எனும் திருமூலரின் வரிகள் முப்பொருள் உண்மைத்துவம், நித்தியத்துவம் என்பவற்றைத் தெளிவுபடுத்துகின்றன. பதி மேலான பரம்பொருள்; அது தன்னியல் பாகிய சொரூப நிலையில் இருந்து இறங்கி வந்து, மல வாசனைக்கு உட்பட்டு வினைகளைச் செய்து பிறவித் துன்பத்துள் உழல்கின்ற ஆன்மாக்களை அவற்றில் இருந்து மீட்கும் நிலை தடத்த நிலை ஆகும். இந்நிலையில் இதன் திருவருள், சக்தியாக - அம்மையாராக வெளிப்படும். ஆன்மாக்கள் மூலமலமாகிய ஆணவத்தின் ஆளுகைக்குட் பட்டு கன்ம, மாயாமலங்களுள் அழுந்துகின்றன. இறையருளால் நல்லறிவு தொழிற்பட உண்மையுணர்ந்து கன்ம, மாயா மலங்களில் இருந்து ஆன்மாக்கள் விலகும். இறையருளால் ஆணவமலம் வலிகுன்ற இறைவனுடன் கலந்து பேரின்பத்தை அனுபவிக்கும் என்பதே சைவசித்தாந்த மெய்யியலின் சாரமாகும். சாஸ்திரங்கள் தர்க்கவியலின் வழி, மொழிந்த அரூபவியல் கருத்துக்களைப் புலவர் இந்நாடகத்தில் உருநிலைப்படுத்தி வெளிப்படுத்துகின்றார்.

சைவசித்தாந்தப் பதியாக நீலகண்ட அரசன் முன்னிலைப்படுத்தப்படுகிறார். 'நீலகண்டன்' என்ற புராணப் பெயர் தேவர்களுக்காக ஆலகால விஷத்தை உண்ட இறைகருணையை உணர்த்திருக்கின்றது. ஆகவே இது தடத்தநிலைப் பதியை வெளிப்படுத்துகின்றது. தடத்தநிலைப் பதியே உயிர்களின் நன்மைக்காக ஐந்தொழில் செய்யும். அவ்விறையாற்றல் சக்தி எனப்படும். அச்சக்தியை சிவகாமி அம்மையார் எனும் பாத்திரம் இங்கு உணர்த்தி நிற்கின்றது. உயிருக்காகக் கசிந்துருகுபவர் என்ற கருத்தியலின் வெளிப்பாடாகவே அம்மையார் எனும் பின்னடை பயன்படுத்தப்பட்டுள்ளது.

சைவசித்தாந்த ஆன்மாக்கள் பற்றிய கருத்தியலின் பிரதிநிதியாக உயிரிளங்குமரன் முன் நிறுத்தப்படுகின்றான். இறைவனுடன் இருக்கும் பேரின்பம் கிடைத்தும் அதனை அனுபவியாது உயிரானது மலவாசனையால் அலையும்; பிறவிக்கு உட்படும். உயிருடன் சகசமலமாக இருப்பது ஆணவம்; இது ஆன்மாவை இருண்மைக்குள் தள்ளுவது; இதனால் இந்நாடகத்தில் ஆணவம் இருண் மலவரசனாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. பதியின் இயல்புகள் யாவற்றுக்கும் எதிர் உருவமாக இருண்மலவரசன் சித்திரிக்கப்படுகின்றான். ஆன்மாவில் கன்மமும் மாயையும் இடையில் வந்து போவன. ஆகந்துகமலங்கள்; உலகத்தில் உடல் வழி கிடைக்கும் இன்பம் சிற்றின்பம்; அதனைப் புலவர் சிற்றின்பவல்லியாக உருவகப்படுத்தி யுள்ளார். சிற்றின்பவல்லியின் தாய் மாயை; 'மாயை மயக்கமும் செய்யும் அன்றே' எனும் சைவசித்தாந்தக் கருத்தை புலவர் எடுத்தாள்கின்றார்.

புராணக் கதைகளில் இடம்பெறும் பதியின் இருப்பிடம் கைலாசம்; அதுவே வெள்ளையங்கிரி; அது நீலகண்டவரசனின் இடமாகும். மாயையின் இடமான மாயாபுரி இருண்மலவரசனின் இடமாகும். ஆன்மா உடலுடன் வாழும் இடம் புவனம் என்ற வகையில் புவனபுரியும் இங்கு காட்சிக் களங்கள் ஆக்கப்பட்டுள்ளன. புவனத்தில் கிடைக்கும் சிற்றின்ப நுகர்ச்சிக்கு உடலே காரணம். அது சிற்றின்பத்தை, சிற்றறிவைக் கொண்டது. மாயா மயக்கம் நீங்கும்போது ஞானத்துடன் ஆன்மாவுக்கு நட்பு ஏற்படும். அதனையே 'அறிவன்' எனும் பாத்திரத்தின் ஊடாகப் புலவர் எடுத்துக்காட்டுகின்றார்.

இவ்வாறான பாத்திர உருவாக்கம் சைவசித்தாந்த சாஸ்திர கருத்துக்களை விளக்க எழுந்த புராண இலக்கியமான கந்தபுராணத்திலும் இடம் பெற்றுள்ளது. பதி – சிவன், பசுக்கள் - தேவர்கள், ஆணவம் - சூரபதுமன், கன்மம் - சிங்கமுகாசுரன், மாயை - தாரகாசுரன், இறைவன் மலங்களை ஒடுக்கி உயிர்களுக்கு விடுதலை அளித்தல் முக்தி என இது விளக்கப்படுகின்றது. ஆனால் புலவரது கலையாக்கம் நிகழ்த்துகலையான நாடகமாகும். இது ஒரு புது முயற்சி; மக்களிடம் நேரடியாக - கற்றவர் கல்லாதவர் சிறியவர் பெரியவர் என்கின்ற வேறுபாடு இன்றி அவர்கள் புலக்காட்சியாக சைவசித்தாந்த மெய்யியலை அறிந்து கொள்ளக்கூடியதாக இக்கலையாக்கம் அமைந்துள்ளது.

சைவசித்தாந்தம் பதி, உலகு என்பனவற்றுக்கு முதன்மை கொடுத்தாலும் இவ்விரு பொருள்களுக்கும் அர்த்தப்பாட்டை நல்க வல்லது பசுவாகிய உயிர் என்றே கருதுகின்றது. இந்நாடகமும் உயிரிளங்குமரனை மையப்படுத்தியே கட்டமைக்கப்பட்டுள்ளது. பதியுடன் இணைந்திருக்கும்வரை பேரின்பத்தை அனுபவிக்கும் உயிர், மலவாசனைக்கு உட்படு மிடத்து மயக்கமுறும். அந்தவகையில் ஆன்மா சார்ந்ததன் வண்ண மானது. இவ்வாறு சைவசித்தாந்தம் கூறும் உயிர் பற்றிய கருத்துக்களை உயிரிளங்குமரன் பேரின்பவல்லியை கண்டு காதல் கொள்ளல், வினையால் நீலகண்ட அரசன் ஆணைப்படி புவனபுரி உலகம் செல்லல், இருண்மல வாசனைக்குட்பட்டு சிற்றின்பவல்லியில் மயக்கமுறல், தன் செயல்களால் சிறைப்பட பின்பு சுப்ரமணிய சுவாமி (குரு) உபதேசம் கேட்டு சிந்தை தெளிந்து சிவகாமி அம்மையாரை (திருவருட்சக்தியை) வந்தடைதல், பேரின்பவல்லியை திருமணம் செய்தல் எனும் நிகழ்வுகளின் வழி எளிமையாக விளக்கப்பட்டுள்ளன. இருண்மல வாசனைக்கு உட்பட்டவர்களை புலவர்

*'வஞ்சகர் ஆசையர் மோகர் குரோதனர்*
*வாதினர் சூதினரே*

*எஞ்சலில்கோபர் உலோபர் பொறாமையர்*
*இச்சையர்கொச்சையரே*

*குண்டர் செருக்கர் அருக்கர் பெருக்கமில்*
*கோளகர் கீழகரே*

*வண்டர் இரண்டகர் மிண்டகர் தண்டர்*
*மயக்கர் கயக்கர்களே'*

(1936, பக்.27)

எனக் கீழ்பிறவிகளாகப் பட்டியலப்படுத்துகிறார். கொலை, களவு, காமம் உள்ளிட்ட பாதகங்களைச்

செய்பவர் பிறவிச்சாகரத்துள் உழல்வர் என்றும் வையத்துள் வாழ்வாங்கு வாழும் இல்லறம் இனிது என்பதை ஞானசம்பந்தர் வழி நின்று விதந்துரைக்கிறார் (1936, பக்.19). இல்லறம் என்பது நல்லறம் என்றும் நல்லறம் இயற்றுபவர் நல்லறிவு பெறுவர் என்றும் இறை அருளுக்குப் பாத்திரமாவர் என்றும் புலவர் விளக்குகின்றார்.

உலக இன்பத்துள் - சிற்றின்பத்துள் சிறையுண்டு கிடக்கும் உயிரிளங்குமரனை சுப்பிரமணியமுனிவரின் உபதேசம் விடுவிக்கின்றது; நல்வழி காட்டுகின்றது. சைவசித்தாந்தம், ஆன்மா பிறவித்தளை நீங்கவும் இறைவனை அறியவும் உண்மையைப் புரிந்து கொள்ளவும் பிரதான வழியாக குருவை அவரின் உபதேசத்தையே முன்னிறுத்துகின்றது (சிவஞானபோதம். சூத்.09). அறிவிக்க அறிவதாய் ஆன்மா இருக்கின்றது. ஆகவே குரு அறிவிக்க, அது அறியும். ஆதலால் தான் 'தகப்பன் சாமியான' சுப்பிரமணியனை குருவாக புலவர் உருவகப்படுத்தினார் போலும்.

மாயையாலான உடல் நிலையற்றது; அது தரும் இன்பமும் நிலையற்றது (1936, பக்.91); அதனை உணர ஞானம் கைகூடும். ஞானம் பேரின்பத்தை நாடச் செய்யும் (1936, பக்.102). ஆன்மா சீவன் முக்தி, விதேக முக்தி என இரு முக்திகளை அடைய முடியும். உடலுடன் கிடைக்கும் முக்தி சீவன் முக்தி. இதற்கு உயிரானது உடலுடன் இருக்கும்போது (காயாபுரி கோட்டை) அதில் இருக்கும் ஆறு ஆதாரங்களின் வழி குண்டலினியை எழுப்பி யோகத்தில் சிறக்க வேண்டும்; குண்டலினி பெருவெளியை அடைய வேண்டும். அது முக்தியை சித்திக்கச் செய்யும் (1936, பக்.108) என சைவசித்தாந்த கருத்தியலை தெளிவாகப் புலவர் எடுத்தாள்கின்றார்.

புலவர், 'வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே' (3.49.1) 'நற்றுணையாவது நமச்சிவாயவே' (4.11.1) என சம்பந்தர், நாவுக்கரசர் வழி நின்று புலவரும் நாம வழிபாட்டை முதன்மைப்படுத்துகிறார்.

*'வேதம் நான்கும் தோன்ற முன் தோன்றிய...*
*விந்து நாதம் நின்று முன் தோன்றிய....*
*வேத வேதியர் தோன்றும் தோன்றிய....*
*தீதில் அயன் மால் தோன்ற முன் தோன்றிய...'*

(1936, பக்.115)

என நாமவழிபாட்டுக்கு அடிப்படையாகிய நாதத்தின் பெருமையை எடுத் துரைத்துள்ளார். அதேபோல குரு வழிபாட்டினுடைய முக்கியத்துவத்தை

*'ஐயா ஒரு சிங்கக்குட்டியை - இங்கு*
*"ஐந்து நரி பற்றி முட்டியே - மிகு*
*ஆசை வலையினிற் கட்டியே - இது*
*வினை போயற மலமாறுற*
*வெகுவாழ்வுற மகிழ்வேயுற*
*வெட்டிவிட வந்தேன் கிட்டியே'*

(1936, பக்.87)

என்னும் வரிகளின் வழி சுப்ரமணியமுனிவர் கூற்றின் வலி வெளிப்படுத்து கின்றார். சிவஞானபோத வழி நின்று (சூத். 12) சங்கமவழிபாடாகிய அடியார் வழிபாட்டை நாடகத்தின் இறுதியில் 'ஊழியவன் தொண்டர் உயர்ந்து' (1936, பக்.128) எனும் வரியின் வழி உணர்த்தி நிற்கின்றார்.

**சைவசித்தாந்தமும் சமூக அசைவியக்கமும்**

பல்வேறு இடர்பாடுகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருந்த ஈழத்து சைவசமூகத்தின் மீட்சிக்கு சைவசித்தாந்தக் கருத்துக்களைக் கூறியும் மறுசீரமைப்பின் ஊடாகவும் உதவ முற்படுகிறார் புலவர். சைவ சித்தாந்தம் ஒரு வாழ்வியல் தத்துவம் என்பதனை பலவாறு நிறுவவும் மக்கள்மயப்படுத்தவும் சமூக விழிப்புணர்வு ஊட்டவும் புலவர் முற்படுகிறார்.

1) சைவசித்தாந்தத்தின்படி ஓர் உயிரின் இலட்சியம் ஆன்ம விடுதலை ஆகிய பதியுடன் இணைதல்; எனப்படுகிறது. வாழும் வரை வாழ்வாங்கு வாழுதல் வேண்டும். அன்பும் கருணையும் கொண்ட நல்லறம் நடத்துபவராக இருத்தல் வேண்டும். பஞ்சமா பாதகச் செயல்களைக் கைவிட வேண்டும். நிலையற்ற வாழ்வில் நிலைப்பன செய்ய வேண்டும் என

சுப்பிரமணியர் உபதேசத்தின் வழி (1936, பக்.127) எடுத்துரைக்கின்றார். அக்காலச் சமூகத்தில் இடம்பெற்ற மிருகபலிக்கு எதிரான குரலை இதன்வழி அவர் முன்வைக்கின்றார். மாடு, கோழிகளைக் கதற கதற வெட்டுதல் கொலை தொழிலே அன்றி வழிபாடாகாது (1936, பக்.29) என்று எடுத்துரைக்கின்றார் புலவர்.

2) அடியவர் வீரத்தை முன்னிறுத்தி காலனிய ஆதிக்கத்திலிருந்து விடுபடுகின்ற தேச விடுதலைக்கான வீரத்தை புலவர் ஊட்டுகிறார். இலங்கைத் தமிழரின் மெய்யியலாக சைவ சித்தாந்தத்தை முன்னிறுத்த முற்படுவதும் இந்நாடகத்தில் இலங்கை பற்றிய குறிப்புகளை முன்னிறுத்துவதும் தேசவுணர்வைத் தூண்டுவதாகவே அமைகின்றது. இலங்கையின் வழக்கில் உள்ள அணாப்பி (1936, பக்.45) புருடா (1936, பக்.85) முதலான சொற்களைக் கையாளுதல் ‘கல்லார் மனமும் இலங்கையிலே கடுகணாவை குகை இருளும்’ (1936, பக்.35) முதலான உவமைகளைக் கையாளுதலும் இதனை சான்றுப்படுத்துகின்றன.

3) அக்காலச் சமூகத்தில் மக்களிடையே நிலவி வந்த நம்பிக்கை களையும் புலவர் எடுத்தாள்கின்றார். நல்ல கனா, கெட்ட கனா, நன்னிமித்தம், துன்னிமித்தம் என்பன அவற்றுட் சில. மேலும் மகளிர் விளையாட்டு (பந்து விளையாடுதல்), மற்றும் கீச்சு மாச்சுத் தம்பளம் முதலானவற்றை சைவசித்தாந்த கருத்துகள் புலப்பாட்டின் வழி புலவர் பதிவிடுகின்றார்.

4) இல்லறம் மேற்கொள்ளும் மானுடர் பிற உயிர்களுக்கு உதவ வேண்டும். அது அவர்தம் அறம்; அதனைச் செய்ய அறத்தின்வழி பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும். ஈழத்தில் உழவும் நெசவும் சிறப்புத்திருந்தன. உலக மகாயுத்தம், உள்நாட்டு; கலகங்கள் விவசாயத்தை பாதித்தன, தரிசு நிலங்கள் ஆக்கின. அதேபோல நெசவுத் தொழிலில் காலனிய அரசு நூல்களைப் பெற்று தன் நாடு கொண்டு சென்று அங்கே முடிவு பொருட்களை உற்பத்தி செய்து மீள இலங்கை போன்ற நாடுகளுக்கு விற்கின்றது. இவ்வாறு நூலில் வழி துணிகளை சேலைகளை உருவாக்கும் திறன் இலங்கை போன்ற தேசங்களுக்கு இல்லை என்ற எண்ணத்தை அது விதைத்தது. புலவர் இவற்றைக் கூறி மறுத்து, இவ்விரு தொழில்களையும் கண்ணே போல் இலங்கை மக்கள் போற்ற வேண்டும் என தெளிவுறுத்துகிறார். அதன் ஊடாக இப்பிரபஞ்சத்தில் இல்லறத்தார் நல்லறம் புரிய முடியும் என்று நம்பிக்கை ஊட்டுகின்றார்.

5) நெசவு இழிதொழிலாகப் பார்க்கப்படுவதை புலவர் பதிவிடு கின்றார். (1936, பக்.116) ‘உண்டி கொடுத்தலும் உடை கொடுத்தலும் ஒன்றே’ என தொழில் தர்மத்தை எடுத்துரைக்கும் இந்த நாடகம் எழுதப்பட்ட காலத்தில்தான் மகாத்மா காந்தி இலங்கை வந்து சென்றார் என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. காந்தியின் சுதேச - நெசவு கருத்தியல் புலவரை பாதித்துள்ளது என்பது இதன்வழி புலப்படுகின்றது.

6) சைவசித்தாந்தம் சாதிய வர்க்க அடிப்படைகளைக் கொண்டது எனும் கருத்தியலுக்கு மாறாக, புலவர் புலயரான வள்ளுவர் குலத்தவரை, அவர் தரப்பு நியாயங்களைப் பேசுகிறார். நாதப்பறையே தொன்மையானது என்பதன்வழி பறை இசைக்கும் மக்கள் தமிழ் தொல்குடியினர் என்று அடையாளப் படுத்துகிறார். வேத பிராமணர்க்கு முந்தியவர் என்பதன் வழி பிராமணரிலும் முதன்மையானவர் என்கிறார். ஒரு காலத்தில் நெசவு எல்லாப் பெண்களுக்குமான பொதுத்தொழில் (1936, பக்.117) என்பதன் வழி நெசவுத்தொழில் செய்யும் இவர்கள் இழிந்தவர்கள் அல்ல என்று உரைக்கின்றார்.

இது பேதமற்ற, மானுட வாழ்வில் யாவரும் ஒன்றே என்ற கருத்தை வலியுறுத்தி நிற்கின்றது. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' (திருமந்திரம். 2104) என்கின்ற சைவசித்தாந்த வழி இது பயணிக்கின்றது.

7) யாவர்க்குமான கல்வியை இந்த நாடகம் வலியுறுத்துகின்றது. உயர் சாதியினரின் வாழ்வியலின் ஒவ்வொரு முக்கிய விடயங்களிலும் பங்கெடுக்கும் உரிமை உள்ளவரை புலையர், தீண்டத்தகாதவர் என ஒதுக்குதல் தவறு என உரிமை குரல் எழுப்புகின்றது. 'கல்வி புகட்டா விட்டதனால் புலையரானோம், உலைவிலாக் கல்வி தந்தீரேல் - நாங்கள் உங்களைப் போல் ஆசார சீல முடையவராகுவோம்' என பறை இசைக்கும் மக்களின் குரலாய் யாவருக்கும் கல்வியை புலவர் வலியுறுத்துகின்றார்.

8) யுத்தங்களால் வாணிபமுடக்கம் ஏற்படுவதைக் குறிப்பிட்டு (1936, பக்.56) பேதமின்றி எல்லாத் தொழிலாளர்களும் உழைத்து உற்பத்தியைப் பெருக்குவதனால் வாணிபம் சிறக்கும் என்கிறார். இதனூடாக வறுமை நீங்கும்; வாழ்வு சிறக்கும் என்பதன் வழி உலக மகா யுத்தத்தால் ஏற்பட்ட பணவீக்கம், பணவீக்கத்திற்கான காரணங்களையும் அதனை நீக்குவதற்கான வழிகளையும் புலவர் எடுத்துரைக்கின்றார்.

மேற்சுட்டிய விடயங்களின் ஊடாக அக்கால சமூக அசைவியக்கத் தோடு சைவசித்தாந்தக் கருத்தியலை இணைத்து காலத்தின் குரலாக இந்நாடகத்தை புலவர் எழுதியுள்ளமை தெளிவாகின்றது.

**முடிவுரை**

சோமசுந்தரப் புலவர் தமது காலச் சூழலை நன்கு புரிந்து கொண்டு சைவத்தையும் சைவ சித்தாந்தத்தையும் நிலைபேறடையச் செய்யவும் மாணவர் அவற்றை எளிதில் புரிந்து கொண்டு தம் வாழ்வியலில் பின்பற்றவும் உயிரிளங்குமரன் எனும் நாடகத்தை ஆக்கி அளித்துள்ளார். சைவசித்தாந்த மெய்யியலின் கட்டிறுக்கம் குலையாமல் அதேவேளை எளிய மொழி நடையை கையாண்டு இந்த நாடகத்தை அவர் எழுதியுள்ளார். பல்வேறு பாவினங்கள், பாவகைகள், கூத்து, இசை நாடகம், சமூக நாடகம் என்பனவற்றின் கலப்புரு கலையாக்கமாக இந்த நாடகத்தை அவர் ஆக்கி அளித்துள்ளார். சமூக வாழ்வியல் பிரச்சினைகளைச் சைவசித்தாந்தத் தளத்தின்வழி எதிர்கொண்டு தீர்வு காண விளைந்தமை இந்த நாடகத்தின் சிறப்பம்சமாக அமைந்துள்ளது. மெய்யியலை அடிப்படையாகக் கொண்டு கலை இலக்கியம் ஆக்கும்முறைக்கு அப்பால் மெய்யியலையே கலையுருவாக ஆக்கியுள்ளமை புலவரின் புலமைச் சிறப்புக்கு எடுத்துக்காட்டாகிறது.

சைவசித்தாந்த அடிப்படைக் கருத்தியலில் மாற்றமின்றி நாடகக் கட்டமைப்புக்கு ஏற்ப, அவற்றை ஆண் - பெண் பாத்திரங்களாக்கி உயிரிளங்குமரனை பதியின் மகனாக்கி பேரின்பத்தை தனித்துவமாக்கி சோமசுந்தரப்புலவர் இந்நாடகத்தை எழுதியுள்ளார். இறைவனுடன் இணைதலே பேரின்பம் என்பது சரிவர உணர்த்தப்படவில்லை. ஆயினும் பேரின்பத்தை அடைவதலே உயிரின் இலக்கு என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. அதேபோல சடமான மலங்கள் கந்தபுராணத்திலே வருவது போல இந்நாடகத்திலும் உயிர் உடைய பாத்திரங்கள் ஆக்கப்பட்டுள்ளன. வாழ்வியல் அறங்கள், சமூகத்தில் உள்ள இடர்பாடுகளை தீர்ப்பதற்கான வழிமுறைகள் என்பனவற்றை சைவசித்தாந்தக் கருத்தியல் தளத்தின்வழி நின்று விளக்கி யாவர்க்குமான கல்வி, பேதமற்ற வாழ்வு என்பனவற்றை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கந்தபுராண கலாசாரத்தின் அடுத்த கட்ட பரிணாமமாக இலங்கையின் சைவத்தமிழ் சமூகத்தில் இந்நாடகம் சைவசித்தாந்த நோக்கில் மக்களை, மாணவரை இலக்காகக் கொண்டு காத்திரமான வகையில் ஆக்கப்பட்டுள்ளது.

**References**

(2017). *Saiva Siddhanta Menmaigalum Ilangayarin Pangalippum* [Paper presentation]. Anaiththu Ulaga Saiva Maanadu. Yaazhpanam: Ilangai.

Balasubramaniyam, M. (1934). *Siddhanta Saaththiram Pathinaangu Moolamum Uraiyum.* Chennai: Saivasiddhanta Maha Samajam.

Gnanasambanthan, A. S. (2022). *Thirumanthiram.* Chennai: Gangai Puththaha Nilayam.

Muthuthamby, V. (1992). *Some Eminent Tamils writers and other Leading figures (19th to 20th century).* Colombo: Department of Hindu Religious Affairs.

Somasundarapulavar, K. (1936). *Uyirilangumaran naadagam.* Yaazhpanam: Veliyeedu K.Veluppillai.